ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1877/26 - 2014 අගෝස්තු මස 28 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.08.28

*1877/26 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டம்**

*1972, ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், கப்பற்றுறை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், கப்பற்றுறை அமைச்சர்.*

கொழும்பு,
*2014, ஓகத்து 28.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் கப்பற் சரக்கனுப்புநருக்கு மற்றும் கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர்களுக்கு (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படலாம் என்பதுடன், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. கப்பற் சரக்கனுப்புநராக அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநராக தொழில் முயற்சியை கொண்டு நடாத்த விரும்புகின்ற கம்பனி ஒவ்வொன்றும் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் வணிக கப்பற் சேவைப் பணிப்பாளர் அதிபதிக்கு (இதனகத்துப் பின்னர், "பணிப்பாளர் அதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இது சார்பான உரிமமொன்றுக்காக கோரிக்கையொன்றைச் செய்தல் வேண்டும்.

3. உரிமமொன்றுக்கான விண்ணப்பமொவ்வொன்றும், விண்ணப்பத்தை முறை வழிப்படுத்தும் நோக்கத்திற்காக ஆணையாளர் அதிபதியால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா தகவலையும் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இயைபான கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

4. உரிமமொன்றுக்கான விண்ணப்பமொவ்வொன்றும், விண்ணப்பதாரர் கம்பனி, கம்பனியின் பணிப்பாளர்கள் சபையின் ஏதேனும் மாற்றம் மீதான தகவலை, காலதாமதமின்றி பணிப்பாளர் அதிபதிக்கு கொடுத்துதவுதல் வேண்டுமென தெரிவிக்கும் எழுத்திலான கூற்றொன்றுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2 - G 20322

5. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் உரிய வகையில் தாபிக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதுமான அல்லது மீள பதிவு செய்யப்பட்ட அரசாங்க அல்லது தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் கூடிய கம்பனியொன்றல்லாத அத்துடன் அதன் பணிப்பாளர் சபையின் பெரும்பான்மை இலங்கை பிரசைகள் அல்லாத வாக்குரிமையுடன் வழங்கப்பட்ட பங்குகளின் 60 சதவீதத்திற்கு குறையாத அளவினை இலங்கை பிரசைகளினால் வகிக்கப்படாத ஏதேனும் கம்பனியொன்றுக்கு கப்பற் சரக்கனுப்புநராக அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநராக தொழில் முயற்சியை கொண்டு நடாத்துவதற்கு உரிமப் பத்திரமொன்றைப் பெறுவதற்கான உரிமை கிடைக்கப்பெறமாட்டாது.

6. மேல் 5 ஆம் கட்டளையிலுள்ள ஏற்பாடுகள் எதுவாகவிருந்தாலும் அதனைக் கருத்திற் கொள்ளாது அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் முயற்சியை கொண்டு நடாத்துவதற்காக உரிமப் பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் கம்பனிகளுக்கு உரிமை கிடைக்கப்பெறும்.

(அ) 2002.04.19 ஆந் திகதியிடப்பட்டதும் 1232/14 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாணயமாற்று கட்டுப்பாடு பற்றிய அறிவித்தலின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையிடமிருந்து ஏற்கனவே மிகக் கூடிய வெளிநாட்டு முதலீட்டு நூற்றுவீதத்திற்கு அங்கீகாரம் பெற்றுள்ள அத்துடன், குறித்த நூற்று வீதம் வரை மாத்திரம் வழங்கப்பட்ட பங்கு மூலதனங்களை இலங்கை பிரசைகளினால் வைத்திருக்கப்படும் கம்பனி;

(ஆ) 2013ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் IV ஆம் பகுதியின் கீழ் தயாரிக்கப்பட்ட 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டம்/வர்த்தக நிலைய கட்டளைகள் பிரகாரம் முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள கம்பனிகள் ;

(இ) 2002.04.19 ஆந் திகதியிடப்பட்டதும் 1232/14 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாணயமாற்று கட்டுப்பாடு பற்றிய அறிவித்தலின் பிரகாரம் இலங்கை முதலீட்டுச் சபையிடமிருந்து ஏற்கனவே மிகக்கூடிய வெளிநாட்டு முதலீட்டு நூற்றுவீதத்திற்கு அங்கீகாரம் பெற்றுள்ள இந்தக் கட்டளை பிரசுரிக்கப்பட்டதன் பின்னர், உள்நாட்டு அனுப்பீடாக கம்பனியின் பங்கு மூலதனம் சார்பில் ஆகக்குறைந்தது 10 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் முதலீடாக பெற்றுள்ள குறித்த கம்பனியின் வாக்குரிமை அதிகாரத்துடன் வழங்கப்பட்ட பங்குகளின் ஆகக்குறைந்தது 20 சதவீதம் இலங்கை பிரசைகளினால் வைத்திருக்கப்படும் கம்பனி.

7. மேல் 5 ஆம் , 6 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கம்பனியொன்றில் பங்கு உரிமையை கொண்டுள்ள இலங்கை பிரசை ஒருவர் இலங்கை பிரசையல்லாத ஆள் ஒருவரின் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அல்லது நம்பிக்கை பொறுப்பாளர் அல்லது முகவருக்கு அந்த பங்குகளை கொண்டிருப்பாராயின் குறித்த பங்குகள் அல்லது அவற்றின் ஏதேனும் ஒரு பகுதியின் பங்கு உரிமையாளராக அவர் கணிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

ஆயினும், பணிப்பாளர் அதிபதியினால் அவ்வாறு செய்யவேண்டுமென பணிக்கப்பட்டால் இந்த பங்கு உரிமையாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் சத்தியக் கடதாசியொன்றின் மூலம் அது பற்றிதான உறுதிப்படுத்துகையொன்றை அத்தகைய கம்பனி ஒன்றினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. ஏற்றிச் செல்வதற்கான ஆவணமொன்றை அல்லது சரக்கனுப்புநரின் கப்பற் சரக்கு பற்றுச்சீட்டினை அல்லது மொத்த கட்டமைப்புசார் சேவைகள் உள்ளடங்கலாக சர்வதேச பொருட்கொண்டு செல்லலுடன் தொடர்புபட்ட வேறு எல்லா சேவைகளையும் வழங்குகின்ற கப்பற்சரக்கு அனுப்பும் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர் ஒன்றின் விண்ணப்பதாரருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய “ஏ வகுப்பு” வகுதி உரிமம் வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் அதிபதி சார்பாக ஐந்து இலட்சம் ரூபா (500,000 ரூபா) பணப் பெறுமதிக்கான வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்படுதல் ;

(ஆ) சர்வதேச போக்குவரத்து சேவைகள் துறையில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ள பதவிநிலை அலுவலரொருவர் பணியாட்டொகுதியில் தொழிலுக்கமர்த்தப்படுதல் ;

(இ) விண்ணப்பதாரர் இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடன் கப்பற்சரக்கனுப்புநராக பதிவு செய்யப்பட்டிருத்தல் ;

(ஈ) விண்ணப்பதாரர் பணிப்பாளர் - அதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியொன்றிலிருந்து சரக்கனுப்புவோரின் “அனைத்து அபாயப் பொறுப்பு” காப்புறுதி மேவுகைக்காக ஆகக் குறைந்தபட்சம் நூறு ஆயிரம் அமெரிக்க டொலர்களும் (100,000 US$) பிழைகள் மற்றும் தவிர்வுகள் தொடர்பாக ஆகக் குறைந்த பட்சம் ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்களும் (50,000 US$) காப்புறுதி மேவுகைக்காக வைத்திருத்தல் ;

(உ) அபாயகரமான கப்பற் சரக்குகளை கையாளல் உள்ளடங்கலாக, ஆகாய மார்க்கமாக அல்லது கடல் மார்க்கமாக கப்பற் சரக்குகளை கையாளலில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிடமிருந்து தொழில்சார் பயிற்சியினை பூர்த்தி செய்துள்ளவர்களும், செல்லுபடியான சான்றுப்படுத்துகையை கொண்டுள்ளவர்களுமான ஆகக்குறைந்த பட்சம் இருவர் அதன் நிரந்தரமான பணியாட்டொகுதியில் இருத்தல் ; அத்துடன்

(ஊ) பொறுப்பு காப்புறுதி மேவுகையை வழங்குவதற்கு அல்லது கப்பற்சரக்கு அனுப்புநர் கழகத்தின் சர்வதேச சம்மேளனத்தின் ஏற்று பொருட்பட்டியல்களை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதிக் கம்பனிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறானவையும், பணிப்பாளர் அதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட "நியம வர்த்தக நிபந்தனைகளுடன்" இணங்கியொழுகுதல்.

9. ஏற்று பொருட்பட்டியல், இல்ல ஏற்று பொருட்பட்டியல் , கடல் மார்க்கமான பட்டியல், ஆகாய மார்க்கமான பட்டியல், இல்ல ஆகாய மார்க்கமான பட்டியல், பல் போக்குவரத்து முறைக்குரிய ஆவணம், சரக்கனுப்புவோர் கப்பற்சரக்கு பற்றுச்சீட்டு எனும் அத்தகையவாறான சர்வதேச கப்பற் சரக்கு போக்குவரத்திற்கான எற்றிச் செல்லல் ஆவணங்களை வழங்குதல் தவிர்ந்த, கப்பற்சரக்கு மற்றும் போக்குவரத்து தொடர்பான சேவைகளை கொண்டு நடாத்துவதில் ஈடுபட்டுள்ளவொன்றான விண்ணப்பதாரருக்கு பின்வரும் நிபந்தனைகளுக்கமைய "பி வகுப்பு" வகுதி உரிமம் வழங்கப்படுதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் அதிபதி சார்பாக இருநூற்றைம்பதினாயிரம் (250,000) ரூபாவுக்கான வங்கி உத்தரவாதமொன்று வழங்கப்படுதல் ;

(ஆ) விண்ணப்பதாரர் இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்துடன் கப்பற் சரக்கு அனுப்புநரொருவராக பதிவு செய்யப்பட்டிருத்தல் ;

(இ) பொறுப்பு காப்புறுதி மேவுகையை வழங்குவதற்கு அல்லது கப்பற்சரக்கு அனுப்புநர் கழகத்தின் சர்வதேச சம்மேளனத்தின் ஏற்று பொருட்பட்டியல்களை வழங்குவதற்காக இலங்கை காப்புறுதி கம்பனிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டனவும் பணிப்பாளர் அதிபதியினால் குறித்துரைக்கப்பட்டனவுமான "நியம வர்த்தக நிபந்தனைகள்".

10. (1) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளில் வழங்கப்பட்ட உரிமம் ஒவ்வொன்றும் முன்னரே இல்லாதாக்கப்பட்டு அல்லது இடைநிறுத்தப்பட்டு இருந்தாலன்றி எந்த ஆண்டு தொடர்பில் அத்தகைய உரிமம் வழங்கப்பட்டதோ அந்த ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் நாள் வரையும் செல்லுபடியானதாதல் வேண்டும்.

(2) கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர் ஒவ்வொருவரும் பத்தாயிரம் ரூபா (10,000) வருடாந்த உரிமக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.

11. (1) உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் பொருளளவில் இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் ஆக்கப்படுத்தல் வேண்டும்.

(2) உரிமமொன்றைப் புதுப்பித்தற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் முன்னுறும் ஆண்டின் நவெம்பர் முப்பதாம் நாளன்று அல்லது அதற்கு முன் செய்யப்படுதல் வேண்டும்.

12. கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநரொருவரின் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற உரமம்பெற்ற ஒவ்வொருவரும் பொதுமக்களின் நலன்கருதி பணிப்பாளர் அதிபதியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய வழிகாட்டு நெறிகளுடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

13. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறான சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வெளிப்படுத்தலில் அல்லது சத்தியக் கடதாசியில் அடங்கியுள்ள ஏதேனும் தகவல் அல்லது விபரம் பிழையானது அல்லது பொய்யானதெனக் காணப்படுகின்றவிடத்து பணிப்பாளர் அதிபதி அத்தகைய கம்பனிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதொழிக்க அல்லது அதனை மீளப்பெற அல்லது இடைநிறுத்த அல்லது அத்தகைய கம்பனிக்கு வழங்கப்பட்ட ஏதேனும் சிறப்புரிமையைப் பயன்படுத்துவதை மீளப்பெற அல்லது இடைநிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.

14. இந்த ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக கம்பனி என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் முறையாக அமைக்கப்பட்டதும் பதிவு செய்யப்பட்டதும் அல்லது மீள்பதிவு செய்யப்பட்டதுமான பொறுப்பு வரையறுக்கப்பட்ட பகிரங்க அல்லது தனியார் கம்பனியொன்றாகும்.

15. 1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்பும் கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 10 ஆம் பிரிவின் கீழ் 2011, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியிடப்பட்டதும் 1717/6 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநர்களுக்கான (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

*(ஒழுங்குவிதி 2 மற்றும் 8)*

*கப்பற் சரக்கு அனுப்புநர் அல்லது கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநர் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்றிற்கான அல்லது உரிமத்தை புதுப்பித்தற்கான விண்ணப்பம்.*

1. விண்ணப்பதாரரின் பெயர் :............................................................
2. பதிவு செய்யப்பட்ட முகவரி :............................................................
3. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலக்கமும், திகதியும் :....................
   (i) கம்பனி பதிவு இல:............................................................
   (ii) கூட்டிணைக்கப்பட்ட திகதி :............................................................
4. பிரதான தொழில் இடத்தின் முகவரி :............................................................
5. தொலைபேசி இல. :.............................. தொலைநகல் இல. :..............................
   மின் அஞ்சல் முகவரி :............................................................
6. தனியார் கம்பனியா அல்லது பகிரங்க கம்பனியா என்பதைக் குறிப்பிடவும் :..............................
7. கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனம் :............................................................
8. கம்பனியின் ஏதேனும் வெளிநாட்டு பங்குத்தொகுதி எவையேனும் இருப்பின் அவற்றின் விபரங்கள்..............................
   ............................................................
9. வங்கி உத்தரவாதத்தின் விபரங்கள் :............................................................
10. இலங்கை மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்துடனான பதிவு இலக்கம் :..............................
    ............................................................
11. அனைத்து அபாயப் பொறுப்புக் காப்புறுதி மேவுகையின் விபரங்கள் :..............................
12. ஐந்தாம் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பதவிநிலை அலுவலரொருவரின் பெயரும் சர்வதேச போக்குவரத்து சேவைகள் துறையில் அவரது அனுபவமும் :..............................
    ............................................................
13. முன்னைய உரிம இலக்க விபரங்கள் (ஏற்புடையதாயின்) ...................................... (ஆண்டு)..............................
14. கடந்த மூன்று ஆண்டுகளில் கப்பற்சரக்கு அனுப்புநர்/கலன் செயற்படுத்தாப் பொதுக்காவுநரான விண்ணப்பதாரரால் இலங்கையில் கையாளப்பட்ட கப்பற் சரக்கின் அளவு (தயவு செய்து ஒவ்வொரு ஆண்டு தொடர்பிலும் விபரங்களை தனித்தனியாக தரவும்).

வணிக கப்பற்சேவை பணிப்பாளர் சபையினதும் கம்பனி தொடர்பான விடயங்களிலுமான ஏதேனும் மாற்றங்களை பணிப்பாளர் அதிபதிக்கு அறிவிப்பதற்கும் நாம் பொறுப்பேற்கின்றோம்.

இந்த உரிமப்பத்திரத்தின் மூலம் தழுவப்படுகின்ற நோக்கங்களின் கையாளலுக்கான எழுத்திலான சட்ட ஏற்பாடுகள் பற்றி நாம் முழுமையாக அறிந்துள்ளோம் என உறுதிப்படுத்துகின்றோம்.

1972 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கப்பற்றொழில் முகவர்களுக்கு, கப்பற் சரக்கனுப்புநருக்கு, கலன் செயற்படுத்தாப் பொதுக் காவுநருக்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநருக்கு உரிமமளித்தல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, கப்பற் சரக்கனுப்புநராக அல்லது கொள்கலன் செயற்படுத்துநராக செயற்படுவதாக கொள்ளப்படுகின்ற ஏதேனும் கம்பனி, பங்குடமை, தனியார் அல்லது கூட்டுத்தாபனத்திற்கு ஏதேனும் சேவைகள் எம்மால் வழங்கப்பட மாட்டாது என இத்தால் வெளிப்படுத்துகின்றோம்.

இவ்விண்ணப்பத்தில் அடங்கியுள்ள எல்லா கூற்றுகளும் எமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில், உண்மையானவையும் சரியானவையெனவும் நாம் வெளிப்படுத்துகின்றோம்.

............................................................
பணிப்பாளர்/பணிப்பாளர்களின் பெயர்/பெயர்களும்/கையொப்பம்/கையொப்பங்களும்.

திகதி :.......................

**குறிப்பு**.- இயைபான எல்லா சான்றிதழ்/ கூற்றுக்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

*10- 496*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.